மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.
O.S.No. 81/2023

வாக்குமூலம்: வா.சா.1 –முருகசாமி
9.09.2025:

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :**

நான் இந்த வழக்கில் மொத்தம் எத்தனை கிரையப் பத்திரம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் 4 கிரையப் பத்திரங்கள் தாக்கல் செய்துள்ளேன். எத்தனை கிரையப் பத்திரத்தில் வழிநடைப் பாத்தியம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் 2 பத்திரத்தில் வழிநடைப் பாத்தியம் உள்ளது. வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.4 ஆகிய ஆவணங்களில் வண்டிப்பாதை மற்றும் வழிநடைப்பாதை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் 3 ஆவணங்களில் வாகன வழிநடைப்பாதை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஒரு ஆவணத்தில் மாமூல் வழிநடைப் பாத்தியம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழிநடைப் பாத்தியமான சர்வே எண் 23/2N ஆனது ராமாத்தாள் என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். பொதுப் பாதைக்கு வடக்கிலும், கிழக்கிலும் தான் மேற்படி இடம் அமைந்துள்ளது. நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை பார்வையிட வந்தார் என்றாலும், கிராம நிர்வாக அலுவலர் நில அளவையருடன் தாவா சொத்தை அளவீடு செய்தார்கள் என்றாலும் சரிதான். நி.ம.சா.ஆ–2 ஆன நிலஅளவையர் வரைபடத்தில் பச்சை நிறத்தில் காட்டப்பட்ட சர்வே எண்.23/20 ஆனது தாவா பாதை என்றால் சரிதான். மற்றொரு வரைபடமும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது நி.ம.சா.ஆ–3 ல் மஞ்சள் நிறத்தில் காட்டப்பட்டுள்ளது பிரதிவாதிகள் நிலத்தில் அவர்களுடைய அனுபவத்தை அனுபவத்தை காட்டுகிறது என்றால் சரிதான். நி.ம.சா.ஆ–1ல் நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த வரைபடத்திற்கும் நி.ம.சா.ஆ–2 ற்கும் வேறுபாடு உள்ளதா என்றால்

ஓரளவு வேறுபாடு உள்ளது. வா.சா.ஆ.5 நான் வழக்கு தாக்கல் செய்த சமயத்தில் தாக்கல் செய்த வரைபடம் என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த வரைபடமும், நான் தாக்கல் செய்த வா.சா.ஆ.5 ஆன மாதிரி வரைபடமும், நில அளவையரின் வரைபடத்திற்கு முற்றிமும் வேறுபாடாக உள்ளது என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் வண்டிப்பாதை என்று எங்குமே குறிப்பிடப்படவில்லை மேற்படி அறிக்கையில் 2-ம் பக்கத்தில் சர்வே எண்.23/20 மண்பாதை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மண்பாதையில் தான் அனைத்து வாகனங்களும் சென்று வருகிறது. வழக்குச் சொத்தானது பழனி வட்டம், மேட்டுப்பட்டி கிராமம் சர்வே எண்.23/20 ல் உள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.23/20 ல் உள்ள பாதையை புலக்க உரிமையின் அடிப்படையில் தான் விளம்புகை பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் சரிதான். சுமார் 40 ஆண்டுகளாக அந்த பாதையில் தான் சென்று வருகிறேன். சர்வே எண்.23/20 க்கு தனிப்பட்டா உள்ளது பட்டா எண்.404 என்றால் சரிதான். சர்வே எண்.23/20 ஆனது இந்த வழக்கு தாக்கல் செய்யும் போது எத்தனை பேருக்கு பாத்தியப்பட்டது என்றால் 7 நபருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். மேற்படி 7 நபர்களையும் இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். 7 நபர்களும் எந்த பிரச்சனையும் செய்ய வில்லை என்பதால் தரப்பினர்களாக சேர்க்கவில்லை. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு நிலத்தை அளப்பதற்காக நில அளவையர் வந்தார் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த நிரூபண வாக்குமூலத்தில் 6 வது பாராவில் இந்த பாதையை நில அளவையர் அளவை செய்ய வந்த போது பாதையில் பொது உரிமை உள்ள மற்ற நபர்கள் அளவை செய்வதை தடை செய்ததால் அளவை செய்வது

தடைப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி பொது உரிமையாளர்கள் அளவை செய்வதை தடை செய்ததால் அவர்களை தரப்பினர்களாக இந்த வழக்கில் சேர்த்திருக்க வேண்டும் என்றாலும், மேற்படி நபர்களை இவ்வழக்கில் சேர்க்காததால் இவ்வழக்கு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல. அவசியமான தரப்பினர்களை சேர்க்காததால் இவ்வழக்கு Non–Joinder of necessary parties என்ற தோசத்திற்கு ஆளாகிறது என்றால் சரியல்ல. இந்த பாதை சர்வே எண்.23/2O புளியம்பட்டி சாலக்கடை நெடுஞ்சாலையிலுருந்து ஆரம்பித்து சர்வே எண்.23/2H வரை செல்கிறது. நீ.ம.சா.ஆ.2 ல் மேற்படி பாதையானது சர்வே எண்.23/2O லிருந்து சர்வே எண்.23/2G வரை செல்கிறது என்றால் சரிதான். இந்த பாதை முடிவடையும் இடத்தில் சர்வே எண்.18/5 உள்ளது என்றால் இல்லை சிறிது தூரம் தள்ளி உள்ளது. சர்வே எண் 18/5 ல் கோவில் உள்ளது என்றால் இல்லை தற்போது சர்வே எண்.23/2G ல் உள்ளது. மேற்படி கோவில் பொதுக் கோவில் என்றால் சரிதான். சர்வே எண்.23/2O ல் எங்களுக்கும், பிரதிவாதிக்கும் மற்ற கூட்டுப்பட்டா தாரர்களுக்கும் சென்று வர உரிமையுள்ளது என்றால் சரிதான். நாங்கள் மட்டும் தான் சென்று வருவோம். மேற்படி பாதையை பிரதிவாதியும் பயன்படுத்தி வருகிறார் என்றாலும், நான் சொல்வது பொய் என்றாலும் சரியல்ல. இந்த பாதையானது ஆரம்பித்திலிருந்து முடியும் வரை ஒரே அளவில் தான் உள்ளதா என்றால் ஒரே அளவில் தான் உள்ளது. நீதிமன்ற ஆணையர் தனது அறிக்கையில் மேற்படி பாதை ஒரே அளவில் இல்லை என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் ஆணையர் அவ்வாறு குறிப்பிட்டுள்ளார் ஆனால் ஒரே அளவில் தான் உள்ளது. சர்வே எண்.23/2O உள்ள பாதை சர்வே எண்.23/2L மற்றும் சர்வே எண்.23/2M என்ற நிலத்திற்கு தெற்கில்

உள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.23/2L மற்றும் சர்வே எண்.23/2M உள்ள நிலம் பிரதிவாதி வகையறாவுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். சர்வே எண்.23/2N பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். பொதுப்பாதை மேற்படி சர்வே எண்.23/2N க்கு வடக்கிலிருந்து தெற்கு வருகிறது என்றால் சரிதான். சர்வே எண்.23/2O மட்டுமே பாதை என்றாலும், சர்வே எண்.23/2L, சர்வே எண்.23/2M, சர்வே எண்.23/2N ஆகிய நிலங்கள் எனக்கு பாத்தியப்பட்டதில்லை என்றாலும் சரிதான். சர்வே எண்.23/2O ல் சுமார் 15 வருடங்களுக்கு முன்பு சிறிய வாகனங்கள் மட்டுமே செல்ல முடியும் அங்கு 6 அடி மட்டுமே உள்ளது என்றால் சரியல்ல. சர்வே எண்.23/2M ஆன பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட இடத்தை ஆக்கிரமித்து செய்ததால் தான் நில அளவையரை வைத்து அளவீடு செய்ய வந்தார்கள் என்றால் சரியல்ல. நாங்கள் தடுத்ததால் தான் நில அளவை செய்வது தடுக்கப்பட்டது என்றால் சரியல்ல மற்ற நில உரிமையாளர்கள் தான் தடுத்தார்கள். நீதிமன்ற ஆணையர் அளவீடு செய்ய வரும் போது பாதைக்கு முட்டுக்கல் எதுவும் போடவில்லை என்றால் சரிதான். மேற்படி பாதையை அளந்து முட்டுக்கல் போட்டால் எவ்வித பிரச்சனையும் ஏற்படாது என்றால் சரிதான். பாதையை அளந்து முட்டுக்கல் போடுவதற்கு நடவடிக்கை எடுக்க தயாரா என்றால் நான் தயாராகத் தான் உள்ளேன். மேற்படி பாதையானது 16 அடி பாதை ஆகும். சர்வே எண்.23/2O க்கு மற்ற உரிமையாளர்களையும் சேர்த்து பாதையை அளந்து முட்டுக்கல் போட்டால் பிரதிவாதியும், நாங்களும் பாதையை அனுபவித்து கொள்வதற்கு எவ்வித பிரச்சனையும் ஏற்படாது என்றால் சரிதான். மற்ற உரிமையாளர்களையும், இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்த்தால் தான் நான் கோரிய பரிகாரம் கிடைக்கும் என்றாலும், மேற்படி மற்ற

உரிமையாளர்களை சேர்க்காததால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

APOORVA S

Digitally signed by APOORVA S
Date: 2025.09.09 18:05:01 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பழனி.